**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் நாள்வியாழக்கிழமை

**O.S. No.85/2024**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.1 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | தண்டாயுதபாணி | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | கணேசன் | கிராமம் | : | சேங்காலிபுரம் |
| | | | தொழில் | : | விவசாயி |
| | | | வயது | : | 62 |

**குறுக்கு விசாரணை**

1ம் பிரதிவாதி தந்தை கோதண்டபாணி பாட்டனார் பெயர் கருப்பையன் படையாட்சி என்றால் சரிதான். மேற்படி இருவரிடமிருந்து தான் எனது தந்தை கணேச செட்டியார் கடந்த 12.12.1969 ல் ஒரு குறிப்பிட்ட சொத்தை கிரயம் பெற்றுள்ளார்என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணம் தான் அந்த கிரய ஆவணம் என்றால் சரிதான். **அந்த ஆவணமானது பி.வா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த ஆவணத்தில் கண்ட புல எண்.170/7 ல் 4 1/3 சென்டை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். புல எண்.170/8 ல் 1 சென்டை கிரயம் பெற்றுள்ளார் என்றால் சரிதான். பொதுவாக 1969 ம் ஆண்டில் செண்ட் கணக்கும் குழி கணக்கும் தான் குறிப்பிடப்படும் என்றால் சரிதான். அதேபோல் தான் பி.வா.சா.ஆ. 1 ஆவணத்திலும் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். தற்போது ஏர்ஸ் கணக்கிலும் மற்றும் சதுர மீட்டர் கணக்கில் தான் வருவாய்ஆவணங்களும் கிரய ஆவணங்களும் ஏற்படுத்தப்பட்டு வருகிறது என்றால் சரிதான். 1 செண்ட் என்பது 3 குழி என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்.170/7 ல் 4 1/3 செண்ட் என்பது 13 குழி குறிக்கும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ள புல எண்.170/8 ல் 1 செண்ட் என்பது 3 குழி குறிக்கும் என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ன் ஆவணத்தின் படி புல எண்.170/7 ல் 13 குழியும் புல எண்.170/8 ல 3 குழியும் மொத்தம் 16 குழியும் எனது தகப்பனாருக்கு சொந்தமானது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை 1 ம் பிரதிவாதியின் தந்தையும் பாட்டனாரும் தான் ஏற்படுத்திக் கொடுத்தார்கள் என்றால் சரிதான். புல எண்.170/7 என்பது தற்போது புல எண்.170/18 ஆக மாறியுள்ளது என்றால் சரிதான். புல எண்.170/8 என்பது அதே புல எண்ணாகத்தான் உள்ளது.

எனது தந்தை இறந்த பிறகு குடும்ப உறுப்பினர்களுக்கு இடையே 09.09.2022 ல் ஒரு பாகப்பிரிவினை பத்திரம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால் சரிதான். **அந்த ஆவணமானது பி.வா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** பி.வா.சா.ஆ 2 ஆவணத்தில் B Schedule ல்உள்ள சொத்தானது எனக்கு ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ 2 ஆவணத்தின் B Schedule ல் காணப்பட்டுள்ள சொத்து ஏர்ஸ் மற்றும் சதுரமீட்டர் கணக்கில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். B Schedule சொத்தில் வரிசை எண்.2 ஆக புல எண்.170/18 பழைய புல எண்.170/7 152 சதுரமீட்டர் என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். வரிசை எண்.3 ஆக புல எண்.170/8 ல் 1 ஏர்ஸ் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. 1 ஏர்ஸ் என்பது 7 1/2 குழியாகும். 1969 ல் 1 ம் பிரதிவாதியின் தந்தையார் மற்றும் பாட்டனாரிடமிருந்து கிரயம் பெற்ற சொத்தை அடிப்படையாகக் கொண்டு B Schedule சொத்தாக எனது குடும்ப பாகப்பிரிவினை பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ.1 ஆவணத்தில் புல எண்.170/8 ல் 1 செண்ட் 3 குழி என காட்டப்பட்டுள்ளது. அதே புல எண் பி.வாசா.ஆ 2 ஆவணத்தில் வரிசை எண்.3 ஆக புல எண்.170/8 ல் 1 ஏர்ஸ் 71/2 குழி என்று காட்டப்பட்டுள்ளது. பி.வாசா.ஆ 1 ஆவணத்தில் புல எண்.170/8 ல் 1 செண்ட் 3 குழி என்றும் அதே புல எண்ணிற்கு பி.வாசா.ஆ 2 பாகப்பிரிவினை பத்திரத்தில் புல எண்.170/8 ல் 4 1/2 குழி சேர்த்து 1 ஏர்ஸ்சாக காண்பிக்கப்பட்டுள்ளது. பி.வாசா.ஆ 1 மற்றும் பி.வாசா.ஆ 2 ஆவணத்திற்கும் புல எண்.170/8 ஐ பொறுத்து 4 1/2 குழி வித்தியாசம் உள்ளது என்றால் சரிதான். புல எண்.170/8 ல் 4 1/2 குழி கூடுதலாக பாகப்பிரிவினை பத்திரத்தில் கண்டுள்ளது பற்றி வேறு ஆவணங்கள் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளாரா என்றால் இல்லை. தாவா சொத்தின் புல எண்.170/8 ன் மேற்கு புறம் எனது வீடு உள்ளது என்றால் சரிதான். கிழக்குப்புறம் மனோகரன் வீடு உள்ளது என்றாலும் வடக்குப்புறம் சாலை உள்ளது என்றாலும், தெற்குப்புறம் பிரதிவாதிகளின் வீடு உள்ளது என்றாலும் சரிதான். புல எண்.170/8 ஐ பிரதிவாதிகள் கொல்லைப்புறமாக பயன்படுத்தி வந்தார்கள் என்றால் நாங்கள் இருவரும் பயன்படுத்தி வந்தோம். என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் தாவா இடத்திற்கு மேற்கு புறத்தில் தாவா இடத்திற்கும் எனது சொத்திற்கும் தடுப்பு சுவர் நேராக உள்ளது என்றால் சரிதான். **இந்த புகைப்படமானது பி.வா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த சுவரானது 8 அடி சுவர் இருக்கும் என்றால் சரிதான். பி.வாசா.ஆ 3 ஆவணத்தில் காட்டப்படும் புகைப்படத்தில் கட்டப்பட்டுள்ள இரும்பு கேட் பிரதிவாதிகளால்

அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்தின் கிழக்குப்புறம் உள்ள மனோகரன் வீட்டிற்கும் தாவா சொத்திற்கும் இடையே முன்புறம் காம்பவுண்டும் பின்புறம் கம்பி வேலியும் அமைக்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். தாவா சொத்து புல எண்.170/8 ஐ பிரதிவாதிகள் கொல்லைப்புறமாக வண்டிப்பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்தானது மேற்குப்புறத்தில் எனது வீட்டிற்கும் ் சொத்திற்கும் சுவர் அமைக்கப்பட்டு கிழக்குபுறம் மனோகரன் வீட்டிற்கும் தாவா சொத்திற்கும் கம்பி வேலி அமைக்கப்பட்டு பிரதிவாதிகள் தனிப்பட்ட முறையில் ஆண்டு அனுபவித்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.3 ல் உள்ளது தான் தற்போதைய தாவா சொத்தின் அமைப்பு என்றால் சரிதான். தற்போது பிரதிவாதிகள் தான் இரும்பு கேட் போட்டு பூட்டி பாதையாக பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரிதான். பிரதிவாதிகளுக்கு சொந்தமான கொல்லைப்புறமாக பயன்படுத்தி வருகிறார்கள். கடந்த 08.02.2021 ல் 1ம் பிரதிவாதிதாவா இடத்தை அளவீடு செய்ய கோரி மனு கொடுத்து அந்த இடத்தை கிராம நிர்வாக அலுவலர் மற்றும் நில அளவையர் வந்து அளவீடு செய்தார்கள் என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணமானது தாவா சொத்தை அளவீடு செய்த அறிக்கை என்றால் சரிதான். **அந்த அறிக்கையானது பி.வா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அந்த அறிக்கையில் பி.வா.சா.ஆ.1 ஆவணத்தை பரிசீலனை செய்து 6 3/4 செண்ட் 16 குழி ஸ்தலத்தினை புல எண்.170/7, 170/8 ல் கிரயம் செய்து கொடுத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். என் வீட்டிற்கு கிழக்கில் உள்ள பாதை தான் தாவா சொத்து. புல எண்.170/8 மற்றும் புல எண்.170/18 ல் கிழக்கில் உள்ள பாதையை தவிர்த்து 16 குழி விஸ்தீரணம் கணேச செட்டியார் அனுவத்தில் உள்ளது என்று குறிப்பிடப்புள்ளது என்றால் சரிதான். இந்த அறிக்கையில் அடிப்படையில் 1969 ல் பத்திரத்தை பி.வா.சா.ஆ.1 ஐ பரிசீலனை செய்தும் இடத்தை அளவீடு செய்தும் எனது வீட்டிற்கு கிழக்கில் உள்ள பாதையை தவிர்த்து 16 குழி எனது தந்தையின் அனுபவத்தில் உள்ளது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.170/8 ல் எனது தந்தையால கிரயம் பெற்ற 1 செண்ட் 3 குழியை சட்டத்திற்கு- புறம்பாக மூல ஆவணங்கள் எதுவும் இல்லாமல் 4 1/2 குழி என்று கூடுதலாக சேர்த்து வருவாய் ஆவணங்களை மாற்றம் செய்து பி.வா.சா.ஆ.2 ஆவணத்தின் வரிசை எண்.3 வது சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.2 ஆவணத்தில் வரிசை எண்.3 வது சொத்தாக காண்பிக்கப்பட்டுள்ள சொத்தானது எனது அனுபவத்தில் இல்லை என்றால்

சரியல்ல. தாவா சொத்தில் 170/8 ல் 3 குழியை நான் கிரயம் செய்துவிட்டேன் என்றாலும் பாக்கி உள்ள சொத்து பிரதிவாதிகளுக்கு சொந்தமானது என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகளுக்கு சொந்தமான சொத்தில் எனக்கு எந்த அனுபவமும் கிடையாது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ. 4 அறிக்கையில் பிரதிவாதிகள் தான் அனுபவித்து வருகிறார்கள் என்று கண்டுள்ளது என்றால் சரிதான். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்குரையில் 2 ம் பக்கத்தில் உள்ள பாரா 1 ல் 16 குழி என்றும் , வழக்குரையின் சொத்து விபரத்தில் 19 குழி என்று மாறுபட்டுள்ளது என்றால் சரிதான். புல எண்.170/8 ஐ பொறுத்து எனக்கு பிரதிவாதிகளுக்கு பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். நான் விளம்புகை பரிகாரம் கோரப்படவில்லை என்றால் சரிதான். நான் உண்மைக்கு மாறாக தூய கரங்களுடன் நான் நீதிமன்றத்தை அணுகவில்லை என்றால் சரியல்ல. தற்போது தாவா சொத்து எனது அனுபவத்தில் இல்லை என்றால் சரிதான். பிரதிவாதிகள் கேட் போட்டு வைத்துள்ளார்கள் . நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடியது அல்ல என்றால் சரியல்ல. வழக்குரையில் பிரச்சனை செய்ததாக குறிப்பிடப்பட்டுள்ள தேதி வழக்கிற்காக கற்பனையாக சொல்லப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் என்னுடைய இடத்தில் எழுப்பிய சுவரை பிரதிவாதிகள் இரண்டு முறை இடித்துவிட்டார்கள். என்னால் சுவர் எழுப்பப்பட்டு பிரதிவாதிகள் இடித்ததாக சொல்லப்படும் சங்கதியை நான் வழக்குரையிலும் முதல் விசாரணையிலும் சொல்லவில்லை என்றால் சரியல்ல. நான் அவ்வாறு சுவர் எழுப்புவதற்கு வாய்ப்பில்லை என்றால சரியல்ல. சொத்தின் அனுபவம் உரிமையும் இல்லாமல் நான் கேட்கக்கூடிய பரிகாரம் எனக்கு கிடைக்கக்கூடிய அல்ல என்றால் சரியல்ல. வழக்கு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.11 13:15:54 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal